முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1284

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

05.04.2023, புதன்கிழமை

1. தர்மசக்திமிகு யுகமாக மாற்ற
தண்டாயுதன் என் அவதாரமாக வந்த
ஆறுமுக அரங்கனே உந்தனுக்கு
அருளுவேன் சுப்ரமணியர் யானும் இனிதே
2. இனிதே சுபகிருது சேல் திங்கள்
(சுபகிருது வருடம் பங்குனி மாதம் 22 ம் நாள், 05.04.2023, புதன்கிழமை)
இயம்பிடுவேன் ஞான அறிவுரை ஆசி
கனிவேலவன் என் கருணைவடிவாகவே
கலியுகத்தில் அன்னதான சேவையாற்றி
3. பழிபாவங்களையெல்லாம் மக்களிடை இருந்து நீக்கி
பரோபகாரமிக்க உயர் ஞானவான்களை படைக்க வேண்டி
வேண்டியே ஞான உபதேசம்
வினவிட ஜீவதயவாக அருளும்
4. தொண்டர் படைகளை நிரப்பி
தேசமெல்லாம் ஞானம் தந்தருளும்
அருளுகின்ற மகா சக்தியாக ஆக்கமாக வந்த அரங்கனே
அருளும் பொருளும் அரங்கன் உன் தயவால் அகிலமெல்லாம் நிரம்பிஇனிதே
5. பேருலகம் ஞான லோகமாகும்
பிசகின்றி சர்வபலமும் காணும்
காணவே அரங்கன் தொடர்புகூட்டி
கலியுகத்தார் வந்தால் போதும்
6. ஞானவான்களாக உலகமெல்லாம் நிரம்பி
ஞானிகள் படைகளாக இந்த கலியுகம் சிறப்புகொண்டு
கொண்டுமே ஞான யுகமாக
குருபரன் என் தலைமை கொண்ட ஞான ஆட்சியும் மலரக்கூடும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–